






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2025) கிருஷ்ணகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 2,052 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்வில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வின்போது, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத். சட்டமன்ற உறுப்பினர்கள் டி.மதியழகன், ஒய்.பிரகாஷ், டி.ராமச்சந்திரன், மேயர் எஸ்.ஏ. சத்யா, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### எஸ்.முரளி முன்னிலை! மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

# 124 ‘அ’ வட்டத்தில் உறுதிமொழி ஏற்பு!

## வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, செப்.15-

ஓரணியில் தமிழ்நாடு ஒரு கோடி குடும்பங்களை உறுப்பினராக சேர்த்தமைக்கு வெற்றி விழாவாக கொண்டாடுவதற்காக பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா அன்று உறுதி மொழி ஏற்கும் நிகழ்வினை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளம் தலைவர் வழிகாட்டுதலில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் இன்று (15.09.2025) காலை 9.30 மணி அளவில் வீ.சி. கார்டன் முதல் தெரு சந்திப்பில் 124 (அ) வட்டத்தில் 79-வது பாகத்தில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் உறுதிமொழி ஏற்க உள்ளனர்.

இதில் வட்டக் கழகத்தை சார்ந்த மாமன்ற உறுப்பினர், மாவட்ட பிரதிநிதிகள்,

வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, பாக நிர்வாகிகள் BLA2 மற்றும் BLC BDO கழக முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

